26th March 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் என்ற பிரச்னை இல்லை. அங்குள்ள வலைஞர்களை வைத்து அவர்களுக்கு டிரையினிங் கொடுத்து பின்னாலே அந்த இன்ஸ்டிட்யூட் ஆரம்பிக்கவேண்டுமென்பதுதான் திட்டத்தின் அடிப்படை.

திருமதி சி. குழந்தையம்மாள் : சென்ற ஆண்டு என் தொகுதியில் உள்ள டெக்ஸ்டைல் கம்பெனிக்கு பீடர் இண்டஸ்டிரியாக அருகாமையில் உள்ள சாமக்குளம் பஞ்சாயத்து யூனியனிலே ஒரு தொழில் ஸ்தாபனம் வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. எமெர்ஜென்ஸி காரணமாக பணம் இல்லை, நிறுத்தி வைக்கவேண்டும் என்று பதில் வந்திருக்கிறது. மேற்கொண்டு எப்பொழுது துவங்குவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது? இந்த எமெர்ஜென்ஸி, தொடர்ந்து இருந்துகொண்டிருக்குமா? மேலும் இதற்கு ஏதாவது பணம் கொடுக்க முன்வருவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எமெர்ஜென்ஸி இருக்கிறதா, இல்லையா என்று முடிவு செய்வது நம் கையில் இல்லை. அந்நியர் போய்விட்டால் நாளைக்கேகூட 'லிப்டு' பண்ணிவிடலாம். இது மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட பிரச்னை. தனிப்பட்ட முறையில் தனிக் கேள்வி போட்டாலோ அல்லது எனக்கு எழுதி அனுப்பினாலோ, வேண்டியத்தைச் செய்யலாம்.

திரு. மு. பொ. வடிவேலு : கனம் அமைச்சர் அவர்கள் கிராமத்திலுள்ளவர்கள் அங்கு பயிற்சி பெறுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு ஆசிரியர் அங்கு கிடைப்பதில்லை. உதாரணமாக, மண்பாண்ட தொழிற்சாலை சம்பந்தமாக மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க ஆசிரியர் 'ஸ்கில்டு அஸிஸ்டெண்டு' இல்லாததினால், அந்த யூனிட் தொடங்கப்படாமல் இருக்கிறது. இதை அரசாங்கம் கவனிக்குமா?

கனம் திரு. சே. ம. மஜீத்: அம்மாதிரி விஷயங்களை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

Dealth in Police lock-up

*408 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a youth by name Doss died in the Police lock-up in the Mount Road Police station (D-11 Police station) on 28th December 1963 : and

(*b*) if so, the reasons therefor?

The HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A suspect named Doss, who was lodged in the Police station on the night of 27th December 1963 in connection with a theft, committed suicide at night by hanging.

[26th March 1964

திரு. மீ. கலியாணசுந்தரம் : போலீஸ் லாக்கப்பிற்குள் இருக்கிற பொழுது, எப்படி தற்கொலை செய்துகொள்ள முடிந்தது? தற்கொலை செய்து கொள்ளக்கூடிய வசதிகளைப் போலீஸார் எப்படி அனுமதித்து வந்தார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர் ' கன்விக்டெட் பிரிஸனர் ' இல்லை. எவர்சில்வர் டிபன் பாக்ஸ் திருடியது பற்றி சார்ஜ் செய்யப்பட்டவர். எஸ். ஐ. கேஸ் ரிஜிஸ்டர் செய்து, அவரை லாக்கப்பில் வைத்தார். ஹெட் கான்ஸ்டேபிள் அங்கே சார்ஜில் இருந்தார். இன்னும் இரண்டு கான்ஸ்டேபிள்களும் இருந்திருக்கிறார்கள். 28—12—1963 காலை 4½ மணிக்கு ஹெட்கான்ஸ்டேபிள் அவர் தூக்கு போட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தார். அவர் 8 முழம் துணி கட்டிக்கொண்டிருந்தார். அந்த துணியை வைத்து தூக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார். அதற்கப்புறம் ' போஸ்டு மார்டம் எக்ஸாமினேஷன் ' நடந்திருக்கிறது. ' ப்ரொபஸர் ஆப் போரன்ஸிக் மெடிசன் ' அவரைக் கவனித்திருக்கிறார். பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட் ' பைண்டிங் ' கொடுத்திருக்கிறார். இதில் ' பவுல் ப்ளே ' ஒன்றுமில்லை, தூக்குப் போட்டுக்கொண்டு இறந்துவிட்டார் என்று இன்குவெஸ்டில் முடிவு செய்யப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : இது சம்பந்தமாக நடத்தப்பட்ட விசாரணை என்ன? விசாரித்தவர் யார்? அதனுடைய விவரங்கள் யாவை?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் தான் இன்குவெஸ்டு விசாரணை செய்தார். ' ப்ரொபஸர் ஆப் பாரன்ஸிக் மெடிஸின் ' அவர்களையும் விசாரித்து இருக்கிறார். மற்றவர்களையும் விசாரித்து, டாக்டரையும் விசாரித்து, அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இதுபோன்ற நிகழ்ச்சிகள் தினமும் சட்ட மன்றத்தில் வந்துகொண்டிருக்கின்றன. போலீஸ் லாக்கப்பில் கொண்டுபோய் வைக்கப்பட்டவர் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்துவிட்டார் அல்லது விஷம் சாப்பிட்டு இறந்துவிட்டார் என்று சொல்லி விசாரணை செய்கிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இது சர்வசாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. இனிமேலாவது இதை அரசாங்கம் பரிசீலனை செய்து, இப்படி எதற்காக ஏற்படுகிறது என்பதைக் கண்டுபிடிப்பார்களா? இதிலே அடித்து கொல்லப்பட்டு அல்லது வேறு விதத்தில் மரணம் ஏற்பட்ட பிறகு, தூக்கு போட்டுக்கொண்டு செத்ததாக வழக்கை ஜோடிக்கிறார்களா என்று அரசாங்கம் தனியாக விசாரணை செய்யுமா? இப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் இனிமேல் போலீஸ் ஸ்டேஷனில் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி தினமும் நடைபெறுகிறது என்று சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இதில் அடித்துக் கொல்லப்பட்டார்கள் என்று சொல்லுவதற்கு

26th March 1964]

இடம் ஒன்றும் ஏற்படவில்லை. இன்குவெஸ்டு நடந்திருக்கிறது. இன்னும் கட்டுப்பாடாக ராத்திரி பூராவும் வாட்ச் செய்வதற்கு, இம் மாதிரி நடைபெறுமல் இருப்பதற்கு என்ன செய்வது என்பது பற்றி போலீஸார் விசாரித்து, வேறு எவ்வாறு நடைமுறைகளை மாற்றுவது என்பது இப்பொழுது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. மு. கருணுநிதி: தூக்குப் போட்டுக் கொள்வதற்குக் கயிருக வேட்டி உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறினர்கள். அந்த வேட்டியை மேலே மாட்டிக் கொள்வதற்கேற்ற வசதிகள் அந்த போலீஸ் லாக்கப்பிலே இருந்ததா? அப்படி இருக்கலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதெல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: இது போன்று போலீஸ் லாக்கப்பிலே இருக்கிறவர்கள் இறக்கும்போது பிரேத விசாரணை செய்யும்போது, அந்த ஸ்தலத்தில் இருக்கிற பார்லிமெண்ட் மெம்பர்கள் அல்லது சட்டசபை மெம்பர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அல்லது முனிசிபல் சேர்மன் முதலியவர்களை வைத்து பிரேத விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மாஜிஸ்டிரேட் செய்கிற விசாரணை பகிரங்க விசாரணை பஞ்சாயத்துதார்களை வைத்துக் கொண்டு செய்கிருர்கள். மற்றவர்களும் அதிலே கலந்து கொள்ளலாம்.

MR. SPEAKER : Respectful, Panchayatdars are there. **How** will M.Ps. and M.L.As. be available there?

திரு. இரா. நெடுஞ்செழியன்: லாக்கப்பிலே இருக்கிற கைதிகளை 24 மணி நேரமும் காவல் காக்கவேண்டிய பொறுப்பு காவல் துறையினரைச் சேர்த்தது. அப்படி காவல் காத்துக் கொண்டிருக்கும் பொழுது வேட்டியை மாட்டிக்கொள்வதற்கு குறைந்தது அரை மணி அல்லது ஒரு மணி நேரம் முயற்சி எடுத்திருக்கவேண்டும். காவல் துறையினரின் கண்ணிலே படாமல் தூக்கு போட்டுக்கொள்ளப்பட்டதா? காவல் துறையினர் காக்கத் தவறிவிட்டார்களா? அப்படியென்ருல் யார் யார் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது??

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றி அரசாங்கம் விசாரணை செய்கிறது என்று சொன்னேன்.

திரு. து. ப. அழகமுத்து: சமீபகாலமாக போலீஸ் லாக்கப்பிலே தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. இந்தச் சபையில் பதில் அளிக்கும் போதெல்லாம் கைதிகள்

[26th March 1964

தற்கொலை செய்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது. போலிஸாரால் அடித்து துன்புறுத்தப்பட்டு, செத்தார்களென்று ஏதேனும் செய்தி சர்க்காருக்கு வந்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினருக்கே அம் மாதிரி செய்தி கிடைக்கவில்லையென்றால், நான் சொடுப்பதற்கில்லை. போலீஸாரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டவர்களும் இல்லாமலில்லை. இதையெல்லாம் அரசாங்கம் அப்போதைக்கப்போது கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. கோ. சி. மணி : குறிப்பிட்ட போலீஸ் லாக்கப்பில் இருந்த கைதி தற்கொலை செய்துகொள்வதற்குக் காரணமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆளுங் கட்சியினர் தங்களுடைய அரசியல் விருப்பு வெறுப்புகளுக்காக போலீஸ் அதிகாரிகளை நாடுகின்ற காரணத்தால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பதால், ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா? இனி மேலாவது நல்ல முறையில் விசாரணை செய்து இப்படி நிகழ்ச்சிகள் பெருகுவதற்குக் காரணமென்ன என்பதை கண்டு அறிய அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதை விசாரித்தது ஒரு மாஜிஸ்டிரேட்.

"கேர்" பால் பவுடர்

* 409 **கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஒரு வருடத்திற்கு அமெரிக்காவிடம் இருந்து நமது அரசாங்கத்திற்கு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள பால் பவுடர் கிடைக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The value of milk powder received from America through the CARE Organisation during 1963–64 is about Rs. 1·12 crores.

கம்பளிப் பூச்சி ஒழிப்பு

* 410 **கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் தென்னாற்காடு ஜில்லாவிலே புஞ்சை நிலங்களிலே கம்பளிப் பூச்சியை ஒழிக்க "ஏரியல் ஸ்ப்ரே" (Aerial spray) செய்வதற்காக சர்க்கார் எவ்வளவு **Subsidy** கொடுத்தது?